மாதிரிப் படிவம் (இலக்கம் 01)
பாராளுமன்ற வெளியீடு தொடர் எண் – 290
நிறுவனம் - வெகுசன ஊடக அமைச்சு

முதலாம் பிரிவு : 74.00

தொடர். இலக்கம்	குழுவினால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை சரிசெய்வதற்கு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள்
01	நிலையான சொத்துக்களுக்கான ஆவணங்கள் புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்படாமை	நிலையான சொத்துக்களுக்கான ஆவணங்கள் தற்போது புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கபட்டு வருகின்றது
02	2004.05.11ஆந் திகதி இலக்கம் 171/2004 கொண்ட அரச கணக்கீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சம்பளம் அமைக்கும் கணினி மென்பொருள்களுக்கான முதலாம் இரண்டாம் மற்றும் கடவுச்சொல் மூன்று மாதத்திற்கு ஒரு தடவை மாற்றியமைக்கப்படாதிருந்தமை	உரிய கடவுச் சொல் மூன்று மாதத்திற்கு ஒரு தடவை மாற்றியமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது.
03	கணக்காய்வாளரினால் முன்வைக்கப்பட்டிருந்த அனைத்து கணக்காய்வு விசாரணைகளுக்காகவும் ஒரு மாதத்தினுள் பதில் முன்வைத்திருக்காமை.	அமைச்சிற்கு முன்வைக்கின்ற கணக்காய்வ அறிக்கைகளில் 95 வீதமானற்றிற்கு ஒரு மாதத்தினுள் பதில் அளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு சில கணக்காய்வு அறிக்கைகளுக்காக அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களிலிருந்து விளக்கங்கள் பெற வேண்டியுள்ளதுடன், அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒரு மாதத்தினுள் பதில் அளிப்பதற்கு முடியாமல் போகின்ற சந்தர்ப்பங்கள் எழுந்துள்ளன. எவ்வாறாயினம் அவ்வாறான எல்லா சந்தர்ப்பங்களையும் தடுத்து உரிய திகதிக்கு பதில் முன்வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
04	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் ஆகக் குறைந்தது இரண்டு தடவையேனும் நடத்தப்படாதிருந்தமை.	தற்போது இந் நிலைமை சரிசெய்யப்பட்டு ஒரு வருடத்தினுள் அந்த வருடத்திற்குறியதான காலாண்டு நான்கிலும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நடாத்தப்பட்டது.
05	2017.06.26ஆந் திகதி இலக்கம் 1/2017 கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் 7ஆம் பந்தியின் பிரகாரம் 2018ஆம் வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் துஷ்பிரயோகம் தொடர்பில் தகவல்கள் கொம்பெட்ரோலர் நாயகம் அலுவலகத்திற்கு முன்வைக்கப்படாதிருந்தமை	2018ஆம் ஆண்டில் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட பொருட்கள் இருக்கவில்லை.

06	2017.06.26ஆந் திகதி இலக்கம் 1/2017 கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் 13ஆம் பந்தியின் பிரகாரம் சுற்றுநிருபத்தின் நடைமுறைகளை செயற்படுத்துவது தொடர்பான இணைப்பு நடவடிக்கைகளுக்காக பொருத்தமான அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டு கொம்பெட்ரோலர் நாயகம் அலுவலகத்திற்கு அறிவிக்கப்படாதிருந்தமை.	தற்போது அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டு கொம்பெட்ரோலர் நாயகம் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
07	2020.08.28 ஆந் திகதி இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 1ஆம் பிரிவின் 11.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காலச் சட்டகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நி.பி. 756(6) இன் பிரகாரம் பொருட்கள் தொகை மதிப்பீடு செய்யப்பட்டு உரிய திகதிக்கு உரியதான அறிக்கை கணக்காய்வாளர் நாயகத்திற்கு முன்வைக்கப்படாதிருந்தமை.	2023 காலச் சட்டகத்திற்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளல் இடம்பெற்றது.
08	வருடாந்த பொருட்கள் தொகை மதிப்பீட்டில் கண்டறியப்பட்ட மேலதிக, குறைபாடுகள் தொடர்பான பரிந்துரைகள் ஏனைய பரிந்துரைகள் என்பன உரிய காலத்தினுள் செயற்படுத்தப்படாதிருந்தமை.	2023 காலச் சட்டகத்திற்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளல் இடம்பெற்றது.
09	அனைத்து வாகனங்களினதும் அரச இலட்சினை நிறப்பூசப்படாதிருந்தமை.	பாவனை செய்யப்பட்ட அனைத்து ஒதுக்கப்பட்ட வாகனங்களின் அரச இலட்சினை நிறப்பூசப்பட்டிருந்தமை
10	2016.12.09 ஆந் திகதி இலக்கம் 2016/30 கொண்ட அரச நிருவாக சுற்றரிக்கையில் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் நிறுவனத்திடமுள்ள வாகனங்களின் எரிபொருள் செலவு தொடர்பில் பரீசீலனை செய்யப்படாதிருந்தமை.	கொரோனா நிலமை காரணமாக ஒரே மாதிரியான வாகனங்களிலிருந்து ஒரு வாகனம் என்றவறு தெரிவு செய்யப்பட்டு எரிபொருள் செலவு பரிசீலனை மேற்கொள்ளப்பட்டது.
11	நி.பி 94 (1) பிரகாரம் செலவு விடயத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த ஒதுக்கீடுகளை பயன்படுத்தியதன் பிற்பாட எஞ்சிய ஒதுக்கீட்டு வரையரைகள் அங்கீகரிக்கப்பட்ட வரையையும் தாண்டி சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தமை.	தற்போது வருட இறுதியில் எஞ்சிய ஒதுக்கீட்டுத் தொகை பகுப்பாய்வு செய்து இணைத்துக் கொள்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
12	வருடத்திற்கும் மேலதிகமான காலத்திலிருந்த நிலுவுகின்ற நிலுவைக் கடன் மீதி நிலவியமை	உரிய கடன் மீதி தற்போத முழுமையாக தீர்க்கப்பட்டுள்ளது.

13	நி.பி. 371 இன் பிரகாரம் வெளியிடப்பட்ட அவசர இடைக்கால பணிகள் முடிந்து ஒரு மாதத்தினுள் தீர்க்கப்படாதிருந்தமை.	நிகழ்காலத்தில் அவசர இடைக்கால பணிகள் உரிய அலுவல்கள் முடிந்து ஒரு மாதத்தினுள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.
14	அங்கீகரிக்கப்பட்ட அவசர இடைக்கால கணக்கு மீதி திரைசேறியின் புத்தகத்துடன் காலாண்டு அடிப்படையில் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்ட பண இருப்புகளின் ஒப்பீட்டு அறிக்கை உரிய தினத்திற்கு முன்னர் திரைசேறியின் செயற்பாட்டு திணைக்களத்திற்கு முன்வைக்கபட்டிருக்காமை.	2022 ஆம் வருடம் முதல் பண இருப்புகளின் ஒப்பீட்டட அறிக்கை உரிய தினத்தில் திரைசேறி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டிருந்தமை.

இரண்டாம் பகுதி : 73.00

தொடர். இலக்கம்	குழுவினால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை சரிசெய்வதற்கு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் மற்றும் தற்போதைய நிலை
01	2018 ஜனவரி 24ஆந் திகதி இலக்கம் 02/20 கொண்ட அரச நிருவாக சுற்றரிக்கையின் நடைமுறைகளுக்கு இணங்க உரியவாறு அமைக்கப்பட்ட மனித வள திட்டமொன்று அமைக்கப்படாதிருந்ததமை.	மனித வள திட்டமொன்று அமைக்கப்பட்டுள்ளது. புதுப்பிக்கப்பட்டு வருகின்றது.
02	அமைக்கப்பட்ட மனித வள திட்டத்தின் மூலம் ஆளணியில் 50 அதிகமானோர்க்கு வருடத்திற்கு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலயத்திற்கும் குறையாத பயிற்சிச் சந்தர்ப்பமொன்று சான்றுப்படுத்தப்படவில்லை	கொரோனோ தொற்று நிலமையினுள் அதிகாரிகளின் வரவு வரையறுக்கப்பட்டதன் அடிப்படையில் நிகழ்நிலைப் பயிற்சி செயலமர்வுகள் வரையறுக்கப்பட்ட அடிப்படையிலேயே காணப்பட்டது.
03	மொத்த ஆளணிச் சபையும் உள்ளடங்களாக செயல் முன்னேற்ற ஒப்பந்தமொன்று அமைக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்படாதிருந்தமை	மொத்த ஆளணிச் சபையும் உள்ளடங்களாக செயல் முன்னேற்ற ஒப்பந்தமொன்று அமைக்கப்பட்டு வருகின்றது.
04	திட்டமிடப்பட்ட பயிற்சிச் சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த பயிற்சி சந்தர்ப்பங்களின் அளவு 50 வீதத்திலும் குறைந்த அளவிலே காணப்பட்டது.	கொரோனோ தொற்று நிலமை மற்றும் வரவினை மட்டுப்படுத்தப்பட்டதனால் நிகழ்நிலை பயிற்சி செயலமர்வுகள் வரையறுக்கப்பட்ட அளவிலே காணப்பட்டது.
05	நிறுவனத்தின் கணக்கு தொடர்பில் கணக்காய்வு வாதம் நடைமுறை தரத்தில் அல்லது பாதகமான தரத்தில் காணப்பட்டமை	2021ஆம் ஆண்டுக்கு உரியதாக வழங்கப்பட்டது தரக்கணக்கீடு செய்யப்பட்ட வாதமாகும். கணக்காய்வின் போது காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் சரி செய்யப்பட்டு உண்மையான மற்றும் பொதுவான கணக்காய்வு வாதம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.
06	கணக்காய்வாளர் அறிக்கையில் பரிந்துரை செயற்படுத்தப்படாதிருந்தது.	உரிய பரிந்துரை தற்போது செயற்படுத்தப்பட்டுள்ளது